8th November 1966] [திரு. சா. கணேசன்]

இங்கே வைத்திருக்கிறேன். முதல் சீட்டுக்குரிய இவருக்குச் சொந்தமான நிலம் 0.06 ஏக்கரா, இவர் கட்டாயமாக ஒரு மூட்டை கொடுத்தாகவேண்டும். இதுபோல . . .

MR. SPEAKER: The hon. Member, Sri Alagamuthu, has given notice under Rule 57 to discuss a similar matter.

திரு. சா. கணேசன்: இதுபோன்ற விஷயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கருதி இதுபற்றி விவாதிப்பதற்காகச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்பதாக நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, கொள்முதல் செய்வது என்பது அரசாங்கத்தின் திட்டம். அது நிர்வாக தோரணையில் நடைபெறும்போது ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதை வேறுவகையில் தெரிவிக்க வேண்டுமே தவிர ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல. யாராக இருந்தாலும் விற்பதற்கு அவர்களிடம் நெல் இருந்தால் அதை சர்க்காரிடம் நிர்ணயித்துள்ள விலைக்குக் கொடுக்கவேண்டுமென்பது முக்கியமானது. வேறு ஏதாவது கொள்முதலில் நிர்ப்பந்தம், தவறு இருந்தால் அதைத் தெரியப்படுத்தினால் விசாரித்து சரிசெய்யலாம். ஆனால், இது ஒத்திவைப்புப் பிரரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Consent is withheld.

(2) SUPPLY OF INFERIOR QUALITY RATION RICE IN MADRAS CITY.

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை நகரில் கொடுக்கப்படுகிற ரேஷன் அரிசி மிக மிக மோசமாக உண்பதற்குத் தகுதியற்றதாக இருப்பதைப் பற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற பிரேரபணையைக் கொண்டுவரத் தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

அதையொட்டி, கனம் சபாநாயகர், அவர்களே, நான் தங்கள் அனுமதியைப் பெற்றிருக்கிறேன். சென்னையில் கொடுக்கப்படுகிற அரிசியின் சாம்பிளை ரேஷன் வாங்கியவர்கள் அவர்கள் கையொப்பமிட்டே அனுப்பியிருக்கிறார்கள். அவற்றையும் சபையில் சமர்ப்பிக்கிறேன். அதன்மீது முதல் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாகவேண்டும். ரேஷன் என்று ஏற்படுத்திவிட்டு—இதுபோன்ற அவல நிலை நீடிக்க விடக் கூடாது. அரசாங்கத்தால் ஒழுங்கான முறையில் அரிசி விநியோகம் செய்ய முடியவில்லை என்றால் ரேஷனையே எடுத்துவிட்டு அவரவர்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் கொண்டு வந்து சாப்பிடட்டும் என்று விட்டுவிடலாம். அதையும் தடுத்து இப்படிச் செய்வது சரியல்ல என்று உங்கள் மூலமாக நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த ரேஷன் அரிசிப் பொட்டலத்தை அவரிடத்தில் சமர்ப்பிக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இதுவும் ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். அரிசி எப்போது மட்டமாக இருந்தது, எங்கே அப்படிப் போட்டார்கள் என்று ஸ்பெசிபிக்காக இல்லை. அரசாங்கம் நெல் கொள்முதல் செய்து அரிசியாகக் கொடுக்கிறது. சில சமயங்களில் ரொம்ப நல்ல அரிசியாக இருக்கலாம். இப்போது திரும்பவும் நல்ல அரிசி கிடைக்கிறது. இப்போது நல்ல அரிசி கிடைத்துக் கொண்டிருக்கிறது. நான்கு நாட்களுக்கு முன்னால் புயல் காற்று ஏற்பட்டதால் வெளியிலிருந்து 500 லாரிகளில் வந்து கொண்டிருந்த அரிசி வந்து சேரமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதனால் வேறு இடங்களில் இருந்து வாங்கி அரிசி கொடுக்கப்பட்டது. எப்படி இருந்தாலும் இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : These are not matters for adjournment motion. Consent is therefore withheld.

III.—CALLING ATTENTION TO.

(1) Food situation in Thanjavur District.

Sri RAMA. ARANGANNAL : Sir, I call the attention of the Hon. Minister for Food to the following matter of urgent public importance, namely, the food situation in the Thanjavur District and the agitation in connection with that.

***The Hon. Sri M. BHAKTAVATSALAM :** Sir, normally water would be let in for irrigation from Mettur Dam on 12th June. Owing to unfavourable South-West Monsoon, the release of water was delayed till 21—7—1966. It meant that agricultural operations were delayed. Consequently no wages were given to agricultural labourers. There was an apprehension that Kuruvai would fail and as such mirasdars conserved the stock available with them. As such a difficult position developed in Thanjavur District, the Government met the situation by releasing rice from their stocks by introducing informal rationing in municipalities, town panchayats and villages. Approximately 23 per cent of the population of the District was covered by family cards. This had a very good effect. With the release of water, the situation has improved considerably. The offtake fell from 1495 tonnes a week to 777 tonnes. An attempt was made by some people to exploit the situation. They organised hunger strikes on 29—6—1966 in front of the Collectorate, Thanjavur, and other offices. The hunger strike was given up on 4—10—1966. A general hartal was observed on 4—10—1966 when some shops and market remained closed in some towns. Transport services and other vehicles of traffic functioned normally throughout the State. With the successful monsoon the situation in the District can be said to be quite normal.